# தமிழ் வருடாந்திர மாநாடு
# 46ஆவது அமர்வு

## த.வ.மா.அத்தியட்சரின் அறிக்கை

உப்பாகவும், ஒளியாகவும் இருந்து தேவ மகிமையைத் தேடு

Salt & light

தேதி: 12-13 நவம்பர் 2021

போர்ட் டிக்சன் மெதடிஸ்ட் மையம்

# உலகத்திற்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருந்து தேவ மகிமையைத் தேடு
# தமிழ் வருடாந்திர மாநாடு 46வது அமர்வு
# மலேசிய மெதடிஸ்ட் திருச்சபை
# த.வ.மா அத்தியட்சர் செய்தி
# 12-13 நவம்பர் 2021

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். மீண்டுமாக நாம் நேரில் சந்திக்கும்படி தேவன் நமக்கு கொடுத்த இந்த கிருபைக்காக நான் அவருக்கு நன்றியையும் துதியையும் ஏறெடுக்கிறேன். தேவன்தாமே இந்த நோய்கிருமியின் ஆபத்திலிருந்து நம்மை காக்க ஜெபிப்போம். நமது பேராளர்களில் சிலர் வர இயலாததால் மன்னிக்கும்படியாக கேட்டுக்கொண்டுள்ளனர், வரும் ஆண்டில் 'முழு மாநாடு' நடக்கும் என நாம் எதிர்ப்பார்ப்போம். மலேசிய மெதடிஸ்ட் திருச்சபையின் அத்தியட்சர் டாக்டர் டி ஜெயக்குமார் அவர்கள் நமது மத்தியில் இருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறோம். நாம் இந்த 46வது அமர்வில் கலந்தாலோசிப்பதும் மற்றும் விவாதிப்பதும் தேவனுக்கு மகிமை கொண்டுவரும்படியாக நான் ஜெபிக்கிறேன். இந்த ஆண்டு, பெருந்தொற்றின் பின் எப்படி செயல்படுவது மற்றும் நமது சபையின் வளர்ச்சி பற்றியும் நாம் காணப்போகிறோம்.

1. <u>நமது கடந்த நான்காண்டின் தீர்வுகளை நினைவுகூர்தல் (கருப்பொருள் : தேவ மகிமையைத் தேடு)</u>

a. 2017ல், நமது சபைகளில் தேவன் கிரியை செய்ய நாம் அனுமதிக்க வேண்டும் என அறிந்துக்கொண்டோம். போதகர்களோ அல்லது தலைவர்களோ முக்கிய பங்கு வகிக்கவோ, புகழடையவோ சந்தர்ப்பத்தை தேடக்கூடாது. போதகர்கள் வாரத்தில் ஒரு நாளை வீடு சந்திப்பு ஊழியத்துக்காக ஒதுக்க நாம் தீர்மானித்தோம். சபை மக்கள் தலைவர் மற்றும் உக்கிராணக்குழு தலைவர் போதகரோடு இணைந்துக்கொள்ளலாம் அல்லது சொந்தமாகவே அவர்களுக்கு ஏற்ற வேளையில் வீடுகளை சந்திக்கலாம்.

b. 2018ல், போதகர்கள் மற்றும் மூத்த தலைமைத்துவத்தில் உள்ளவர்கள் ஒருவருக்கொருவர் செவிகொடுத்து மற்றும் ஒருவருக்கொருவர் ஜெபித்து தொடர்ந்து ஒப்புரவாகவும் மீண்டுவரவும் நாம் இணங்கினோம். சில சபைகள் பிரிவினைகளிலும் ஒற்றுமையின்மையிலும் மீண்டும் மீண்டுமாக கடந்துவந்துக்கொண்டிருப்பதால் ஆவிக்குரிய போராட்டம் அவசியம் என நாம் கண்டோம். இப்படிப்பட்ட சபைகள் ஆவிக்குரிய போராட்டத்தின் ஆற்றலை புரிந்துக்கொண்டும் தங்களது காயங்களை கையாளவும் சாத்தான் பயன்படுத்தும் யுக்திகளை அறிந்துக்கொண்டும் செயல்படவேண்டும்.

c. 2019ல், கிறிஸ்துவ சீஷத்துவத்தில் அதாவது நமது குடும்பங்களில், நமது வாலிபர்களிடையே மற்றும் சிறுவர்களிடையே நாம் கவனம் செலுத்த தீர்மானித்தோம். அனைத்து ஸ்தல சபைகளின் சீஷத்துவ நிகழ்ச்சிகளை மறு ஆய்வு செய்ய நாம் கேட்டுக்கொண்டோம். ஆனால், நமது மாநாட்டுக்குப் பின் சில மாதங்களில், நடமாட்டக் கட்டுப்பாடு அமுலுக்கு வந்தது.

d. 2020ல், கோவிட்-19 பெருந்தொற்றினால் நமது அனைத்து ஊழியங்களும் சில கட்டுப்பாடுடன் நடத்தப்பட்டன. ஆனால், நாம் சாதாரணமாக எடுத்துக்கொண்ட பல

விஷயங்களுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கும்படியான சூழலுக்கு இது நம்மை தள்ளியது. தொலைபேசி வழியாக மற்றும் தேவைப்பட்டால் நேரடியாக சந்திப்பதின் வழியாக நாம் ஒருவருக்கொருவர் தொடர்பில் இருப்பதின் அவசியத்தை புரிந்துக்கொண்டோம். ஆவிக்குரிய முன்நிலை ஊழியர்களாக தகப்பன்மார்களுக்கும் தாய்மார்களுக்கும் அதிகாரம்கொடுத்தது, ஆவிக்குரிய விதிமுறைகளில் மற்றும் தங்கள் சொந்த குடும்பத்தை ஒழுங்கில் நடத்தவும் இது அவசியமாகியது.

2. <u>நமது ஸ்தல சபைகளில் தேவன் கொடுத்த கருப்பொருளை கடைப்பிடித்தல்.</u>

a. நமது கருப்பொருள் வழிகாட்டுதலுக்கும் கூட்டு நடவடிக்கைக்கும் கொடுக்கப்பட்டது. வருடாந்திர மாநாடு மற்றும் பொது மாநாடு கருப்பொருள்களை நோக்கி சபைகள் செயல்படவேண்டும்.

b. நமது சபைகள் மற்றும் மாநாட்டு கருப்பொருள் மூலம் தேவனுக்கு செவிகொடுத்து அவருடைய வழிநடத்துதலுக்கு கீழ்ப்படிந்தால், நாம் நிச்சயமாக செழிப்படைவோம்.

c. ஜனவரி 2021, அனைத்து ஏழு மாகாணங்களின் போதகர்களின் ஐக்கியத்தில் (இயங்கலை) கலந்துக்கொள்வதை நான் உறுதிசெய்துகொண்டு நமது அனைத்து ஊழியங்களிலும் கருப்பொருளை அங்கீகரிக்கவும் அதை எப்படி புரிந்துக்கொள்வது எனவும் நான் பகிர்ந்துக்கொண்டேன்.

d. இதே போன்ற கூடுகையை நமது ஸ்தல சபை மக்கள் தலைவர்களுக்கும் மற்றும் உக்கிராணக்குழு தலைவர்களுக்கம் ஒழுங்குப்படுத்த நான் மூப்பர் வாரியத்தை கேட்டுக்கொண்டேன், இதன் மூலம் அவர்கள் கருப்பொருளை பற்றி ஆழமாக தெரிந்துக்கொள்ளவும் அவர்கள் கேள்விகளுக்கு மற்றும் சந்தேகங்களுக்கும் பதில் கிடைக்கும்படியாகவும் செய்யமுடிந்தது.

e. தங்கள் ஸ்தல சபைகளின் சுவர்களையும் தாண்டி பல சபைகள் ஊழியங்களை செய்வதை நான் பாராட்டுகிறேன். ஊதாரணமாக, சபா மற்றும் சரவாக்கில் உள்ள பூர்வகுடியின் சபைகளை ஸ்திரப்படுத்தும்படியாக தங்கள் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யும் சபைகளை காண்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். நேப்பாள் அருட்பணி ஊழியம் மற்றும் அருட்பணியாளர்களுக்காக வருடாந்திர நிதி ஒதுக்கீடு செய்யும் சபைகளும் உண்டு.

f. ஸ்தல சபைகள் நமது சமுதாயத்தில் உப்பாகவும் ஒளியாகவும் செயல்பட தேவனுடைய வழிகாட்டுதலையும் வழிநடத்துதலையும் தேட வேண்டும், அவர் சொல்லும் வழியில் துணிவுடன் செல்ல நாம் தயாராக வேண்டும். ‘இந்தியன்’ மற்றும் ‘தமிழன்’ என்கின்ற முத்திரைக்கு மேலாக, தேவனுடைய அன்பு தேவைப்படுகிறவர்களை தொடுபவர்களாக நாம் இருக்க வேண்டும். தேவன் எங்கு நம்மை வைத்திருக்கிறாரோ அங்கு நாம் உப்பாகவும் ஒளியாகவும் இருக்க வேண்டும்.

g. இதற்கும் மேலாக, ஸ்தல மற்றும் தேசிய அளவிலான அரசாங்க சார்பற்ற அமைப்புக்களுடன் இணைந்து நமது தேசத்திற்காக ஸ்தல சபைகள் உப்பாகவும் ஒளியாகவும் செயலாற்றுவதை காண நான் விரும்புகிறேன். பின் தள்ளப்பட்டவர்களுக்காக மற்றும் ஒடுக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுப்பவர்களை ஸ்தல சபைகள் வரவேற்று ஆதரவு கொடுக்க வேண்டும். இது போன்ற பல குழுக்கள் உள்ளன. போலீசார் சம்பந்தப்பட்ட காவலில் உள்ளவர்கள் மரணம், பூர்வ குடியினரின் உரிமை, அந்நிய

தொழிலாளிகள் விவகாரம், மற்றும் சுற்றுச்சூழல் பராமரிப்பு போன்ற குழுக்களுக்கு நமது ஆதரவு தேவை.

h. இதை நாம் செய்தால் மட்டுமே நம் வாலிபர்கள் மற்றும் அனைத்து அங்கத்தினர்களும் தங்கள் சொந்த சபை தங்கள் விசுவாசத்தை செயல்படுத்த வாய்ப்பு கொடுத்ததை உணருவார்கள், மேலும் தங்கள் விசுவாசமானது தேச அளவில் நிலவும் தினசரி விவகாரங்களுக்கு மிக அவசியமானது என்றும் மிக ஏற்புடையது என்றும் காண்பார்கள்.

i. கடந்த ஆண்டு எனது அறிக்கையில் குறிப்பிட்டதுபோல், இது நமது பணத்தை கொடுப்பது மட்டுமல்ல ஆனால் அவர்களுக்காக ஜெபிப்பதும் அவர்களது நிகழ்ச்சிகளில் பங்குபெறுவதுமாகும். இது நடக்கும்போது, நமது விசுவாசம் சமூக நலனோடு கூட இணைகிறது. நீண்ட காலமாக நமது விசுவாசம் 'தனிப்பட்ட' அல்லது 'சபைக்கு' உரிய ஒன்றாக வரையறுக்கப்பட்டிருந்தது. நமது பிள்ளைகள், வாலிபர்கள் மற்றும் நமது அனைத்து அங்கத்தினர்களும் நம்மை சுற்றியுள்ள யதார்த்தத்துக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும், அதற்காக எதையாவது செய்ய ஒரு வாய்ப்பு அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும்.

j. நான்கு மாதாந்திர அல்லது வருடாந்திர நிகழ்ச்சிகளாக சபைகள் சில குழுக்களுடன் சேர்ந்து இயங்கலாம். முழு சபையும், நமது சங்கங்கள் உட்பட, ஒரு திட்டத்தை தத்தெடுத்து அதை செயல்படுத்தலாம்.

k. சபையில் ஓர் ஓரத்தில் சாவடி நிலையங்கள் எழுப்பப்பட்டு, விழிப்புணர்ச்சி மற்றும் பங்கேற்பு உருவாக்கப்படவேண்டும், நமது ஞாயிறு ஆராதனையில் இதற்காக ஜெபிக்க வேண்டும், நமது ஜீவிய குழுக்களில் இதைப் பற்றி கலந்தாலோசிக்கலாம்.

3. <u>பெருந்தொற்றின்-பின் காலக்கட்டத்தில் ஸ்தல சபையாக செயல்படுவது.</u>

a. நமது ஊழியங்களை மறு-கண்ணோட்டமிடவும், மறு-சீரமைக்கவும் இந்த பெருந்தொற்றினால் நமக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. நமது 'பழைய' வழக்கங்களுக்கு திரும்ப நாம் அனைத்தையும் மறு-ஆரம்பம் செய்ய அவசரப்படக்கூடாது. நாம் முன் செய்தவைகளை திரும்ப செய்யப்போகிறோமா என நம்மை நாம் கேட்டுக்கொள்ள வேண்டும், தேவன் நாம் திரும்பவும் அதே முறையில் காரியங்களை செய்ய விரும்புகிறாரா என தெரிந்துக்கொள்ள வேண்டும்.

b. உதாரணமாக, பல சபைகளில் இயங்கலை வேத ஆராய்ச்சி மற்றும் இயங்கலை ஜெப கூடுகை ஆகியவற்றுக்கு நமது அங்கத்தினர்களிடமிருந்து நல்ல பங்கேற்பு கிடைத்தது. இந்த தளத்தையே தொடர்ந்து உபயோகிக்க ஸ்தல சபை உக்கிராணக்குழு முடிவுசெய்யலாம். நேருக்குநேரான வேத ஆராய்ச்சி மற்றும் ஜெப கூடுகைகளுக்கு நம்மை நாம் கட்டாயப்படுத்த அவசியமில்லை.

c. தடுப்பூசிக்கு எதிராக செயல்படுபவர்கள் மேல் நான் பாரமுள்ளவனாக இருக்கிறேன், அனைத்து சபைகளும் இவர்களுக்கு உதவுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் தேர்வை அவர்கள் தெரிந்துக்கொண்டாலும், நேருக்கு நேர் நாம் ஆராதிக்க கூடும்போது இவர்களின் பங்கேற்பு தடையாக அமையும். இவர்களுக்கு சரியான வழிகாட்டுதல் இல்லாமல் போகலாம் அல்லது பயம் உண்டாகக்கூடும். ஸ்தல தலைவர்கள் மற்றும்

போதகர்கள் இவர்களை சந்தித்து தேவனின் பார்வையில் எது சரியானது என கற்றுக்கொடுக்க வேண்டும்.

d. மேலும், நமது ‘இயங்கலை மட்டும்’ அங்கத்தினர்களின் சவால் கவனிக்கப்பட வேண்டும். வேதம் நமக்கு தெளிவாக கற்றுக்கொடுக்கிறது, ஆராதனைக்கு ஒன்றுக்கூடுதலை விட்டுவிடக்கூடாது. இந்த பெருந்தொற்று நேருக்கு நேர் ஆராதனைக்கான ஒன்றுக்கூடுதலை குறைத்தாலும், இது சபை ஆராதனைக்கு வருவதை தவிர்க்க ஒரு காரணமாகக்கூடாது.

e. எனது கவனிப்பின்படி, நமது அனைத்து மாநாட்டு வாரியங்களும் தங்கள் கூட்டங்களை இயங்கலை வழி நடத்தி பயனடைந்தனர். முன்பு, வாரிய அங்கத்தினர்கள் பங்கேற்பு குறைந்து காணப்பட்டது, கிள்ளான் பள்ளத்தாக்கில் இல்லாத வாரிய அங்கத்தினர்கள் இரண்டு மணி நேரம் பிரயாணம் செய்து ஒரு மணி நேர கூட்டத்தில் கலந்துக்கொள்ள வருவார்கள்.

f. இது போலவே, நமது மாதாந்திர இயங்கலை ஜெபம் தொடரப்பட வேண்டிய ஒரு நன்மையான காரியம்.

4. <u>முழு நேர ஊழியத்துக்கு வாலிபர்களும் இள முதியோரும்.</u>

a. நமது 54 ஸ்தல சபைகளையும் வழிநடத்த இறையியல் தேர்ச்சிபெற்ற போதகர்கள் பற்றாக்குறை தொடர்ந்து கவனம் செலுதப்பட வேண்டிய ஓர் அங்கமாக இருக்கிறது. 8 ஓய்வு பெற்ற போதகர்கள் மற்றும் 10 மூப்பர் போதகர்களின் உதவியால் மட்டுமே நாம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

b. திரு ஜெயபிரகாஷ் (போதக தேர்வாளர்) மற்றும் குமாரி சுசானா ரூபன் (அருட்பணி தேர்வாளர்) வரும் ஆண்டில் ஊழிய பணி அமர்வுக்கு தயாராக உள்ளனர் என்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

c. தற்போது நமக்கு இரு போதக மாணவர்கள் (திரு போல் டேவிட்சன் மற்றும் திரு இம்மேனுவல் தர்மக்கண்) மற்றும் இரு அருட்பணி மாணவர்கள் (திரு ஜெரி ஜோன் மற்றும் திரு ஷர்வின்) மட்டுமே உள்ளனர்.

d. எனினும், ஜெபங்களுக்கு பதிலாக 4 வாலிபர்கள் முழு நேர ஊழியத்துக்கு தங்களை ஒப்புக்கொடுத்துள்ளனர். ஊழிய வாரியத்தினால் இவர்கள் நேர்காணல் செய்யப்பட்டனர்.

5. இரண்டு வாலிபர்கள் (தமெதி சிரம்பான் மற்றும் தமெதி கோலாலும்பூரை சேர்ந்தவர்கள்) தங்கள் ஸ்தல போதகர்களால் வழிநடத்தப்பட்டு வருகிறார்கள். இவர்களுக்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

6. <u>பொருளாதார விபரங்கள்.</u>

a. பெருந்தொற்றின் மத்தியிலும், ஸ்தல சபையின் ஊழியங்கள் எவ்வகையிலும் பாதிக்கப்படாமலிருக்கும்படியாக பலர் தொடர்ந்து கொடுத்து வருவதற்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். ஆனாலும், சில சபைகள் கட்டணங்களை நிர்வகிப்பதற்காக தங்கள் நிலையான வைப்புத்தொகையை பயன்படுத்தவேண்டியதாக இருந்தது.

b. மாகாணங்களில் உள்ள பொருளாதாரத்தில் வலுவான சபைகள் ‘மூத்த சகோதரனாக’ செயல்பட்டு சிறிய சபைகள் தங்கள் தேவைகளை சந்திக்கதக்க உதவுவதை நாம் காண விரும்புகிறோம்.

c. நமது சபை பொருளாளர்களில் சிலர் இன்னும் தங்கள் மாதாந்திர பணம் செலுத்துதலை AECக்கு நகல் அனுப்பாதிருக்கின்றனர், இது கவனிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது. பொருளாளர்கள் தங்கள் பண பரிமாற்ற கணக்குகளை நிதி வாரிய தலைவர், மாநாட்டு பொருளாளர் மற்றும் விஸ்மா TACயில் உள்ள நமது பொருளாதார அலுவலர் திருமதி மெர்ஸி அவர்களுக்கும் நகல் அனுப்புவதை போதகர்களும் தலைவர்களும் உறுதி செய்ய வேண்டும்.

d. நமது AEC கணக்குகளுக்கு AFFIN வங்கி தற்போது நியமிக்கப்பட்டுள்ளது. தவமா அலுவலகம் குறிப்பிடப்படாத கட்டணங்களை மற்றும் பண வரவுகளை தேடி பதிவு செய்வதில் நேரத்தை செலவழித்து வருகிறது.

e. பண கையாடலில் கடந்து சென்ற மூன்று சபைகள் முழு பணத்தையும் திரும்ப பெற்றுக்கொண்டதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தமெதி தைப்பிங் மட்டும் மாதந்தோறும் RM500 செலுத்தப்படும் என்ற சம்மதிக்கப்பட்ட வகையில் சென்று கொண்டிருக்கிறது.

f. நிதி தலைவர் மற்றும் பொருளாளர், விஸ்மா TACக்கு வந்து பின் தங்கியுள்ளவைகளை சரி செய்ய அர்ப்பணிப்போடும் பொறுப்போடும் கவனிப்பதை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

g. மீண்டுமாக, ஸ்தல சபை நிதி வழிகாட்டல்கள் குறிப்பேட்டை Appendix 1 இணைத்துள்ளேன். இதை நகல் எடுத்து அனைத்து உக்கிராணக்குழு அங்கத்தினர்களுக்கு கொடுங்கள்.

h. **KOPTAC:** தவமா கூட்டுறவு, நிலையான வைப்புத்தொகையின் வரவுக்கு மேலாக வருடாந்திர ஈவுத்தொகையை தொடர்ந்து வழங்கி வருகிறது. இந்த வருடம் இவர்கள் இரண்டு விவசாய சம்பந்தமான திட்டங்களில் துணிகரமாக நுழைந்துள்ளனர், தொடர்ந்து காப்புறுதி துறையிலும் வளர்ச்சியடைந்து வருகின்றனர்.

7. <u>மலேசிய மெதடிஸ்ட் திருச்சபை.</u>

a. ஆகஸ்ட் 2022 பொது மாநாட்டின் தொடர் பகுதி நடைபெறும். அனைத்து மனுக்களையும் இவ்வருடம் 31 டிசம்பருக்குள் அனுப்பிவையுங்கள்.

b. மாதாந்திர ஞாயிறு ஜெப கூடுகைக்கு நாம் தொடர்ந்து ஆதரவு கொடுப்போம், இது முழு மெதடிஸ்ட் குடும்பத்தையும் ஜெபத்தில் ஒன்றிணைக்கிறது. அடுத்த ஆண்டு நாம் மெதடிஸ்ட் ஜெப பேரவையை இயங்கலை வழி நடத்துவோம். இது 20-22 மே 2022 நடைபெறும்.

c. இவ்வருடம் நாம் தொடர்ந்து Persidangan Misi Sengoi Bumiputera ஊழியத்துக்கு RM10,000 கொடுத்து வருகிறோம். RM7,590 சரவாக் ஈபான் வருடாந்திர மாநாட்டு போதகர் சம்பள திட்டமாக பூர்வகுடி கிறிஸ்தவர்களை ஊக்குவிக்க கொடுத்து வருகிறோம்.

d. சித்தியவானில் உள்ள Hope Vocational Centre பற்றி நமது சபைகள் அறிந்துக்கொள்ள வேண்டும், இங்கு கல்வியில் பின் தங்கிய அநேக வாலிபர்களுக்கு சிறப்பான வாய்ப்பு

வழங்கி உதவுகிறார்கள். பேராளர்கள் கைப்பிரதி மற்றும் தகவல்களை எடுத்துச்சென்று தங்கள் சபைகளுக்கு தெரியப்படுத்தலாம்.

e. மெதடிஸ்ட் கல்வி உபகாரச்சம்பளத்தின் மூலம் நம் பிள்ளைகளில் பலர் பயனடைந்துள்ளனர். இதை பற்றிய விளம்பரம் அனைத்து ஸ்தல சபை போதகர்களுக்கும் தலைவர்களுக்கும் வருடா வருடம் ஏப்ரல் ஆரம்பத்தில் கொடுக்கப்படும். தயவு செய்து தேவையுள்ள மாணவர்களுக்கு இந்த தகவல் சென்றடைய உதவுங்கள். இந்த முக்கியமான ஊழியத்துக்காக சபைகள் வருடாந்திர ஒதுக்கீடு செய்ய நான் கேட்டுக்கொள்கிறேன், விண்ணப்பம் வரும் வரை காத்திருக்க வேண்டாம்.

f. தேர்வு நிலை போதகர்கள் பயிற்சி மற்றும் திருமணத்திற்கு முன் ஆலோசனை வழிகாட்டி புத்தகம் ஆகியவற்றை சீர்நிலைப்படுத்த அத்தியட்சர்கள் கூடுகை முயற்சித்து வருகிறது.

8. சி.சி.எம். (CCM) இந்திய ஊழிய செயற்குழு, இந்திய சபைகளின் ஐக்கியம் (FIDC) மற்றும் மலேசிய இந்திய கிறிஸ்துவ தலைவர்களின் ஆலோசனை மையம் (CICLAM).

a. மறைதிரு ஜோனத்தன் ஜேசுதாஸ் மற்றும் மறைதிரு ஜோசப் ஏசுபாதம் பொது செயலாளர் பொறுப்புக்கு விண்ணப்பித்து, 22 அக்டோபர் 2021 அதற்குரிய நேர்காணலுக்கும் சென்றுள்ளனர். இவர்கள் இருவர் மாத்திரமே இந்த பொறுப்புக்கு விண்ணப்பித்தவர்கள்.

b. சி.சி.எம். (CCM) இந்திய ஊழிய செயற்குழு தங்கள் திட்டமிடலுக்காக 6 ஜனவரி 2022 கூடுவார்கள். நாம் மார்தோமா திருச்சபை பிரதிநிதிகளையும் கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளோம்.

c. மலேசிய இந்திய கிறிஸ்துவ தலைவர்களின் ஆலோசனை மையம் (CICLAM) அடிக்கடி கூடி ஜெப நிகழ்வுகள் மற்றும் பல நல்ல நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

d. இந்திய சபைகளின் ஐக்கியம் (FIDC) மலேசியா மற்றும் சிங்கப்பூர் சபைகளை ஒன்றிணைக்கும் குழுமம். FIDC பேரவை 4 டிசம்பர் இயங்கலை வழி கூடுவார்கள். மாண்புமிகு அத்தியட்சர் ரோபட் சோலமன் இதில் முக்கிய பேச்சாளர். போதக பிரதிநிதிகள் மறைதிரு டாக்டர் டென்னிஸ் ராஜ், மறைதிரு ஜேம்ஸ் ரவீந்திரன், மறைதிரு சாமி தாஸ், மறைதிரு குணபாலன் மற்றும் மறைதிரு வின்சன் தாஸ் அவர்கள். மூப்பர் பிரதிநிதிகள் திரு மைக்கல் ராஜா, திரு குணா டேவிட், திரு ஸ்டிவன் சேகர், திருமதி சாந்தி சேகர் மற்றும் திருமதி ஜான்சி ஷாம்குமார் அவர்கள்.

---

## முன்னோக்கி செல்ல வழிகாட்டுதல்

### நமது ஸ்தல சபைகளில் சுவிசேஷமும் சபை வளர்ச்சியும்

நமது கவனம் தேவன் மேல் இருக்க வேண்டும், வளர்ச்சிக்கு அவரது கிருபையை தேட வேண்டும், நமது சொந்த அறிவில் மற்றும் புத்திசாலித்தனத்தினால் செய்யலாம் என ஏமாறக்கூடாது.

கடந்த நான்காண்டில், இரண்டு புதிய சபைகள் மட்டுமே (கேட்வே மெதி கிளான ஜெயா மற்றும் தமெதி பாலோ) 54வது மற்றும் 55வது சபைகளாக தமிழ் வருடாந்திர மாநாட்டில் ஸ்தாபிக்கப்பட்டன. நமது புள்ளி விபரங்கள் நமது ஸ்தல சபைகள் நாம் எதிர்ப்பார்த்தது போல வளரவில்லை என காட்டுகிறது. என்ன செய்ய வேண்டும் அதை நாம் எப்படி செய்ய வேண்டும் என்பதில் நாம் உடனடி கவனம் செலுத்த வேண்டும்.

- தேவன் சபை வளர்ச்சியை விரும்புகிறாரா? நிச்சயமாக ஆம், போய் பிறரை சீஷராக்குங்கள் என்று நம்மை அழைத்திருக்கிறார். மத்தேயு 28:18-20
- நமது சபைகள் அனைத்தும் வளர்ச்சியடைய தேவன் உதவுவாரா? இல்லை, நாம் தவறாக சீஷத்துவம் செய்தால் தேவன் ஆசீர்வதிக்கவோ அல்லது வளர்ச்சியடையவோ செய்யமாட்டார். மத்தேயு 23:15
- பிரிவினை கொண்டுள்ள சபையை தேவன் வளரச்செய்யார், காரணம் அது பிரிவினைகளை மட்டுமே வளரச்செய்யும்.
- பெருமை கொண்டுள்ள சபையை தேவன் வளரச்செய்யார், காரணம் அது நமது பெருமையை மட்டுமே வேரூன்றி வளரச்செய்யும்.
- தன்னிறைவு கொண்டுள்ள சபையை தேவன் வளரச்செய்யார், காரணம் அவரின்றி சுயமாக செயல்படக்கூடும் என்ற சபையை அது எழுப்பும். வெளிப்படுத்தின விசேஷம் புஸ்தகத்தில் உள்ள லவோதிக்கேயா சபை இதற்கு ஓரு நல்ல உதாராணம்.

நமது செயல்திட்டம் என்ன, என்று நாம் கேட்போம்.

- சுவிசேஷ வாரியம் இதைக் குறித்து என்ன செய்கிறது? அவர்கள் தங்கள் பொறுப்பில் தோல்வியடைந்துவிட்டார்களா? சுவிசேஷ வாரியம் வசதி ஏற்படுத்திக்கொடுக்கவும், பயிற்சியளிக்கவும் மற்றும் மேம்படுத்தவும் மட்டுமே முடியும். தங்கள் சொந்த சமுதாயத்தில் ஸ்தல சபைகள் செய்ய வேண்டிய காரியங்களை இவர்கள் செய்ய இயலாது. வாரியம் ஸ்தல சபைகளுடன் சேர்ந்து பணியாற்ற தயாராக உள்ளது, ஆனால் எத்தனை சபைகள் வாரியத்தை அணுகியிருக்கின்றன? எங்களது சபையை நாங்கள் நிர்வகித்துக்கொள்கிறோம், வாரியம் எங்களுக்கு கற்றுத்தர வேண்டியதில்லை என கூறினால் அது பெருமையைக் குறிக்கிறது. தேவன் எவ்வாறு பெருமைக்கொண்ட ஒரு சபையை வளரச்செய்யக் கூடும்?
- இன்னும் பல பயிற்சிகளை பெற்றுக்கொள்வோம். கடந்த பத்தாண்டில், சுவிசேஷ பள்ளி, நகர்புற சுவிசேஷ பட்டறைகள் மற்றும் ஸ்தல, மாகாண மற்றும் மாநாட்டு அளவில் சுவிசேஷ ஆய்வரங்கங்கள் நடத்தப்பட்டதாக அறிக்கைகள் காட்டுகின்றன. இவைகள் தெளிவான பலனை காட்டும் வகையில்

பெயர்க்கப்படவில்லை. பயிற்சி பெற்றவர்களுக்கு ஸ்தல சபை தலைவர்களின் ஆதரவு தேவையாயிருக்கிறது. காணமல்போனவர்களுக்கான பாரம் உக்கிராணக்குழுவினருக்கு இருந்தால் மட்டுமே இது நடக்கும், பயிற்சி பெற்ற சிலரினால் மட்டும் இதை நடத்தமுடியாது.

- <u>எழுச்சியான கருப்பொருளை அமைப்போம்.</u> இது முன்பே செய்யப்பட்டாகிவிட்டது. ‘முற்றிலும் இரட்டிப்பு’ மற்றும் ‘GO: ஒருவர் இன்னொருவரை கொண்டுவாருங்கள்’. இந்த முயற்சிகளை நாம் பாராட்டினாலும், மாநாட்டு பேராளர்கள் மற்றும் போதகர்கள் இதனால் உற்சாகமடைந்து தங்கள் சொந்த ஸ்தல சபைகளில் இந்த தரிசனத்தை செயல்படுத்துவார்கள் என நாம் பல வேளைகளில் கருதுகிறோம். கருப்பொருள்கள் சிறிதளவே தாக்கத்தை உண்டாக்கும், தேவன் ஸ்தல சபையில் கிரியை செய்தால் மட்டுமே சபை வளர்ச்சியடையும்.
- <u>ஒரு நல்ல பேச்சாளரைக் கொண்டு ஐந்து நாள் சபை வளர்ச்சியைப் பற்றிய மாநாட்டை நடத்துவோம்.</u> இதுவும் ஒரு நல்ல தீர்வல்ல. முதலாவது, சேர்ந்து நாம் சிந்தித்தால் நாம் தீர்வுகளுக்கு வரலாம் என்பது பெருமையை குறிக்கிறது. ஐந்து நாள் கலந்தாலோசிப்பது, நமது ஒவ்வொரு சபைகளிலும் ஐந்து ஆத்துமாக்களை கொண்டு வந்துவிடும் என்பது நிச்சயமல்ல. இரண்டாவது, சேர்ந்து சிந்திப்பது நல்ல திட்டங்களை உருவாக்கமுடியும், ஆனால் உண்மையாகவே ஒவ்வொரு ஸ்தல சபையும் தனக்கென ஒரு ஸ்தல ஆற்றலை கொண்டுள்ளது (வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள ஏழு சபைகளைப் போல). நமது ஒவ்வொரு சபைகளுக்கும், நமக்கேற்றபடி தனித்துவமாக தயாரிக்கப்பட்ட தீர்வை ஆண்டவர் தாமே கொடுக்க முடியும்.

<u>ஸ்தல சபை உக்கிராணக்குழுவாக நாம் என்ன செய்ய வேண்டும்?</u>

நாம் நமது அனைத்து ஸ்தல சபைகளுக்கும் திரும்ப வேண்டும், மனந்திரும்புதலுக்கு தேவனுடைய பிரசன்னத்தை தேட வேண்டும், தேவனை மட்டுமே சார்ந்திருக்க வேண்டும். மாசற்ற வழியில் நம்மை நாமே தாழ்த்துவோம். தேவனிடம் இவ்வாறாக கூறுவோம், நாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை, ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக்கொண்டிருக்கிறது (2 நாளாகமம் 20:12).

கடந்த காலங்களில் நிலவிக்கொண்டிருந்த சில காரியங்களை கர்த்தர் அகற்ற நாம் அவருக்கு இடங்கொடுப்போம். புது திராட்சரசத்தை பழந்துருத்திகளில் வார்த்துவைக்கிறதில்லை என வேதம் நமக்கு கற்றுக்கொடுக்கிறது. கர்த்தர் அதை செய்யமாட்டார். புது அபிஷேகத்திற்கும் புது மேம்பாட்டுக்கும், பழையவைகள் ஒழிந்துபோக வேண்டும். (ஆகாய் 1:5-6)

நாம் தோல்வியடைந்துள்ளோம் என ஒப்புக்கொள்வோம். புது வளர்ச்சிக்கு நாம் முக்கியத்துவம் கொடுப்போம், வேறு மாற்று வழியில்லை. இந்த செய்முறைக்கு நாம் அவசரப்படக்கூடாது. நாம் நம்மை தாழ்த்தினால் மட்டுமே, சபையாக நாம் வளர தேவன் ஏற்றக் காலத்தில் நமக்கு கிருபை அளிப்பார் (1 பேதுரு 5:5-6).

**A.** தேவனின்றி நாம் வளர முடியாது என நாம் ஒப்புக்கொண்டு நமது பெருமையை அகற்றி நம்மை நாம் தாழ்த்துவோம்.

- சங்கீதம் 127:1 — கர்த்தர் கட்டாராகில்.
- யோவான் 15:1-5 — அவரையல்லாமல் நாம் கனிகொடுக்க முடியாது.
- சங்கீதம் 107:37-38 — தேவன் மட்டுமே பெருகச்செய்ய முடியும்.

**B.** நாம் அயராது உழைத்தாலும், தேவன் மட்டுமே நம்மை வளரச்செய்ய முடியும்.

- எபிரெயர் 3:4 — தேவன் மாத்திரமே.
- 1 கொரிந்தியர் 3:6 — தேவன் மாத்திரமே.
- மத்தேயு 6:33 — தேவனுக்கு எல்லாவற்றிலும் முதலிடம், அவர் எல்லாவற்றையும் கூடக் கொடுப்பார்.

**C.** தேவன் செய்யும் காரியத்தில் சேர்ந்து செயல்பட விழித்திருங்கள். அவரது வழிகாட்டலை தேடுங்கள்.

- யோவான் 5:17 — நம் பிதா தொடர்ந்து கிரியை செய்துவருகிறார், இப்பொழுதும் கூட, நமது சமுதாயத்தில்.
- யோவான் 15:19 — குமாரன் தாமாய்ச் எதையும் செய்யமாட்டார், பிதா எவைகளை செய்கிறாரோ, அவைகளை குமாரனும் அப்படியே செய்கிறார்.
- மத்தேயு 9:37 — தேவன் அறுப்பை ஆயத்தப்படுத்தியிருக்கிறார், வேலையாட்கள் தேவை.

**D.** தேவன் கொடுத்த கருப்பொருளை ஏற்றுக்கொள்வோம்.

- நாம் ஒளியாகும்போது, இருளில் இருப்பவர்களை நாம் இழுக்கிறோம். நமக்குள் இருக்கும் இருளும் அகற்றப்படுவது அவசியம் என இது பொருள்படும்.
- நாம் உப்பாக இருக்கும்போது, நாம் சுவைமிக்கவர்களாகிறோம். நல்ல, சுவையான உணவு எப்பொழுதும் பாராட்டப்பட்டு அனைத்து இடங்களிலிருந்தும் ஆட்களை அழைத்துக்கொண்டுவரும்.
- நமது ஸ்தல சபை எப்படி உப்பாகவும் ஒளியாகவும் நமது சமுதாயத்திற்கு, நமது தேசத்திற்கு, மற்றும் இந்த உலகத்திற்கு திகழ முடியும் என தேவனிடம் கேளுங்கள்.

**E.** எச்சரிக்கையை புறக்கணித்து பின்னர் நமது கடினமான சூழ்நிலைக்கு தேவனை நாம் தவறாக குற்றப்படுத்த வேண்டாம்.

- நீதிமொழிகள் 1:28-31 — தங்கள் சொந்த வழியை தெரிந்துக்கொண்டவர்கள்.
- மத்தேயு 13:58 — இயேசு அவர்களை ஆசீர்வதிக்க முடியவில்லை.
- சங்கீதம் 126:5-6 — தாழ்மையின் கண்ணீர், மனந்திரும்புதலின் கண்ணீர், தேவனின் வழிநடத்துதலை தேடும் கண்ணீர், நாம் தினமும் சந்திக்கும் காணமற்போன ஆத்துமாக்களுக்காக கண்ணீர்.

நண்பர்களே, நமது அனைத்து போதகர்களும், பேராளர்களும் மற்றும் தலைவர்களும் இதை நமது உக்கிராணக்குழுவில் இருப்பவர்களுக்கு எடுத்துச்செல்லுமாறு நான் தாழ்மையாக கேட்டுக்கொள்கிறேன். நீண்ட காலமாக நமது மாநாட்டு தரிசனங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள், மாநாட்டின் கடைசி நாளில் முற்றுப்பெற்றுவிடுகிறது, ஸ்தல சபை தலைமைத்துவத்தின் கவனிப்பின்மையால் அதன் இலக்கை அடையமுடியவில்லை. நாம் வளர்ச்சியை காண முடியாததற்கு இது இன்னொரு காரணம். அதே தவறை நாம் மீண்டும் செய்ய வேண்டாம்.

## நன்றியுரை

a. அத்தியட்சர் டாக்டர் டி ஜெயக்குமார் அவர்களின் ஞானமான ஆலோசனைக்கு, தெளிவான வழிகாட்டுதலுக்கு மற்றும் ஜெப ஆதரவுக்கு நான் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நமது அனைத்து மாநாட்டு அத்தியட்சர்களுக்கும் இவர் ஒரு பெரிய ஆசீர்வாதமாயிருக்கிறார். அத்தியட்சர் அவர்களுக்கு நன்றி.

b. நமது அனைத்து மாகாண கண்காணிப்பாளர்களுக்கும், தேவன் அருளிய போதகர்களுக்கும் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றி. நீங்கள் தமிழ் வருடாந்திர மாநாட்டுக்கு தேவன் கொடுத்த ஆசீர்வாதம். கர்த்தர் தாமே உங்களை எப்பொழுதும் ஆசீர்வதிப்பாராக.

c. மாநாட்டு சபை மக்கள் தலைவர் திரு எஸ் செல்வராஜ் மற்றும் அவரது உதவி தலைவர்கள் யாவருக்கும் அவர்களது ஜெபங்களுக்கும் ஆதரவுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயம், தவமா ஸ்தல சபையாருக்காக போதகர்களோடு சேர்ந்து பணி செய்யும் நம் அனைத்து மூப்பர்களுக்கும் எனது நன்றி.

d. நமது அனைத்து செயற்குழுவினருக்கும் நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன், தவமா சொத்துக்களாக இவர்களை நான் காண்கிறேன், மாநாட்டு செயலாளர், மாநாட்டு பொருளாளர், அனைத்து வாரிய தலைவர்கள், அனைத்து குழுக்களின் தலைவர்கள், யாவரும் தேவனுக்காக தங்கள் சிறந்ததை கொடுத்திருக்கின்றனர். இவர்கள் நமது ஆவிக்குரிய தலைவர்கள்.

e. நமது அலுவலக ஊழியர்கள், சகோதரி மெர்ஸி, சகோதரர் ஷேக்ஸ்பியர், சகோதரி ஜெனிதா (முன்னாள் ஊழியர்) மற்றும் சகோதரி நேசமலர் யாவரும் ஆசீர்வாதமாக அமைந்திருக்கின்றனர்.

f. ஜெப குழுவுக்கும், எனக்காகவும் என் குடும்பத்துக்காகவும் அடிக்கடி ஜெபிக்கும் அனைத்து ஸ்தல சபைகளுக்கும் எனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

g. இறுதியாக, என் அன்றாட காலை ஜெப பங்காளரான என் மனைவி எலிஸ் அவர்களுக்கும், இரவு ஜெப நேரத்தில் கூடயிருந்து ஜெபிக்கும் என் பிள்ளைகளுக்கும் எனது நன்றி.

பெருந்தொற்றின் இக்கட்டுக்குப் பின் தேவன் நமக்கு கொடுத்திருக்கும் இந்த புதிய தொடக்கத்திற்காக நாம் சேர்ந்து ஜெபிப்போம் செயல்படுவோம். நமது பிரயாசத்தை நிச்சயமாக தேவன் ஆசீர்வதிப்பார், எல்லா புகழ்ச்சியும், மகிமையும் கனமும் அவர் ஒருவருக்கே.

‘தேவனுக்கே மகிமை, தெய்வத்திற்கே மகிமை’

தாழ்மையுடன் சமர்ப்பித்தது

அவரது கிருபையில்,
மறைதிரு டாக்டர் டென்னிஸ் ராஜ்
தமிழ் வருடாந்திர மாநாடு,
மலேசிய மெதடிஸ்ட் திருச்சபை.

குறிப்பேடு 1 **(APPENDIX 1):** ஸ்தல சபைக்கான நிதி வழிகாட்டல்கள்.

கடந்த ஆண்டுகளில் பின் வரும் வழிகாட்டல்கள் அனைத்து பேராளர்களுக்கும் அனைத்து ஸ்தல சபை உக்கிராணக்குழு அங்கத்தினர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. சில உக்கிராணக்குழு அங்கத்தினர்கள் புதிதாயிருக்கலாம், ஆகவே இதை பதிப்பிட்டு மீண்டுமாக பகிர்ந்துக்கொள்ளுங்கள்.

**a.** ஒவ்வொரு வாரமும் சேகரிக்கப்படும் காணிக்கைகள் மற்றும் தசமபாகங்களின் மொத்த தொகையை இரண்டு நபர்கள் சரிபார்த்து கையெழுத்திட வேண்டும்.

**b.** அடுத்த மூன்று நாட்களுக்குள் அனைத்து காணிக்கைகளும் மற்றும் தசமபாகங்களும் வங்கியில் போடப்பட வேண்டும். பொருளாளர் இதை செய்ய முடியாத நிலை ஏற்பட்டால், உக்கிராணக்குழுவினரால் நியமிக்கப்பட்ட ஒருவர் இதை செய்ய வேண்டும்.

**c.** உக்கிராணகுழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் மாதாந்திர கணக்கு, வங்கி கணக்கறிக்கையின் கடைசி பக்கத்தின் நகலை சேர்த்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். கணக்கறிக்கையில் உள்ள தொகையும் வங்கியில் உள்ள தொகையும் சமமாக இருப்பதை இது உறுதிசெய்வதற்காக.

**d.** **RM**500க்கு மேலான தொகையாக இருப்பின் சபைகள் ரொக்கமாக கொடுக்காமல், காசோலைகளாக அல்லது நிகழ்நிலை வங்கிமுறையாக செலுத்த முக்கியமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.

**e.** பொருளாளர்கள் எல்லா வங்கி கணக்கறிக்கையையும் தணிக்கையாளர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும், அவர்கள் கையெழுத்தை பெற வேகம் காட்டக்கூடாது.

**f.** முந்தைய மாத மீத தொகைகள் புதிய மாத தொடக்க தொகைகளோடு சமமாயிருக்க வேண்டும். குறிப்பாக முந்தைய வருடத்திலிருந்து (டிசம்பார்) இந்த புதிய ஆண்டோடு (ஜனவரி).

**g.** மாதாந்திர தணிக்கைகள் பரிந்துரைக்கப்படுகின்றன, காரணம் ஆறு மாத கணக்கறிக்கைகள் சில தணிக்கையாளர்களுக்கு பெரும் பலுவாக அமையக்கூடும். பெரிய சபைகள் புற தணிக்கையாளர்களை பயன்படுத்த அறிவுறுத்தப்படுகின்றனர்.

**h.** பொருளாளர்கள் தமிழ் வருடாந்திர மாநாட்டு நிதி தலைவருக்கு மாதாந்திர கணக்கறிக்கைகளை சமர்ப்பிக்கவும் / அனுப்பவும் (மின் அஞ்சல்).

**i.** தங்கள் பொருளாதாரத்தில் அல்லது கட்டணத்தில் பிரச்சனையை எதிர்நோக்கும் சபைகளை நிதி வாரியத்திலிருந்து தணிக்கை குழு சந்திக்கும், அவர்கள் கணக்குகளை சரிபார்க்க, இது மெதடிஸ்ட் ஒழுங்கில் அனுமதிக்கப்பட்டுள்ளது.